சுருக்கம்

கல்லூரிக் கல்வித் துறை – 6 இரண்டாம் நிலை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை முதல்நிலைக் கல்லூரிகளாக தரம் உயர்த்தி ஆணையிடப்படுகிறது.

---

உயர்கல்வி (ஜி.1)துறை

அரசு ஆணை (நிலை) எண்.89 பங்குனி 7, சர்வஜித் திருவள்ளுவர்

ஆண்டு 2039,

நாள்: 20.3.2008.

படிக்கப்பட்டவை

1) அரசாணை (நிலை) எண்.1785, கல்வித் துறை நாள் 5.12.88.
2) அரசாணை எண்.218, கல்வித் துறை நாள் 18.2.89.
3) அரசாணை (நிலை) எண்.650, கல்வி, நாள் 11.6.91.
4) அரசாணை எண்.132, உயர்கல்வித் துறை நாள் 28.5.2007.
5) கல்லூரிக் கல்வி இயக்குநர் கடித எண்.20112/ஜே1/07, நாள் 8.10.2007 மற்றும் 25.1.2008.

---

ஆணை

அரசாணை (நிலை)எண்.1785, கல்வி நாள் 5.12.98–ல் பல்கலைக்கழக நிதி நல்கைக்குழு ஊதிய விகிதம் அமுல்படுத்தி வெளியிடப்பட்டுள்ள ஆணைகளில் இரண்டு முதுநிலை படிப்புகளும் 1000க்கு குறையாமல் மாணவர் எண்ணிக்கையும் உள்ள கல்லூரிகளின் முதல்வர்களுக்கு ரூ.4500–7300 என்ற விகிதத்திலும் மற்ற கல்லூரிகளின் முதல்வர்களுக்கு ரூ.3700–5700ல் குறைந்தபட்சமாக ரூ.4200/– நிர்ணயம் செய்யலாம் என ஆணையிடப்பட்டுள்ளது.

2. அதன்படி மேலே இரண்டு மற்றும் மூன்றில் படிக்கப்பட்டுள்ள அரசாணைகளில் 14 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை முதல்நிலைக் (Grade I) கல்லூரிகளாக அடையாளம் கண்டு அக்கல்லூரி முதல்வர்களுக்கு ரூ.4500–7300 சம்பள விகிதத்தில் ஊதியம் அளிக்க ஆணையிடப்பட்டுள்ளது. தற்போது திருத்திய சம்பள விகிதம் ரூ.16400–22400.

3. அரசாணை (நிலை)எண்.132, உயர்கல்வித் துறை, நாள் 28.5.2007ன்படி 7 இரண்டாம் நிலை (Grade II) அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை முதல்நிலை கல்லூரிகளாக தரம் உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

4. கல்லூரிக் கல்வி இயக்குநர் தனது 8.10.2007 நாளிட்ட கடிதத்தில் சுயசார்பு அடிப்படையிலான பட்ட மற்றும் பட்ட மேற்படிப்பு வகுப்புகளை முறையான வகுப்புகளாக அரசு மாற்றி ஆணை வழங்கியுள்ள நிலையில் தற்போது இரண்டு அல்லது இரண்டுக்கு கூடுதலான பட்ட மேற்படிப்பு வகுப்புகள் மற்றும் 1000 மாணவ மாணவியர் எண்ணிக்கைக்கு மேலும் உள்ள 23 கல்லூரிகளின் பட்டியலை அனுப்பி அவற்றை முதல்நிலை கல்லூரிகளாக தரம் உயர்த்திடுமாறு அரசைக் கோரியுள்ளார்.

5. கல்லூரிக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை அரசு நன்கு பரிசீலனை செய்தது. அரசு கல்லூரிகளில் 3 முதுநிலை படிப்புகளும் 2000 மாணவர் எண்ணிக்கையும் உடைய அரசு கல்லூரிகளை முதல்நிலை கல்லூரிகளாக தரம்

உயர்த்தலாம் என முடிவு செய்து கீழ்கண்ட 6 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை முதல்நிலை கல்லூரிகளாக தரம் உயர்த்தி அக்கல்லூரி முதல்வர்களுக்கு ரூ.16400–22400 ஊதிய விகிதத்தில் சம்பளம் அனுமதிக்கலாம் எனவும் முடிவெடுத்து அரசு அவ்வாறே ஆணையிடுகிறது.

| வரிசை எண் | கல்லூரி பெயர் |
|---|---|
| 1 | அரசு கலைக்கல்லூரி, திருவண்ணாமலை |
| 2 | அரசு கலைக்கல்லூரி, தருமபுரி |
| 3 | அழகப்பா அரசு கலைக்கல்லூரி, காரைக்குடி |
| 4 | அரசு கலைக்கல்லூரி, (மகளிர்), கும்பகோணம் |
| 5 | அரசு கலைக்கல்லூரி (மகளிர்) , புதுக்கோட்டை |
| 6 | அரசு ஆடவர் கலைக்கல்லூரி, நந்தனம், சென்னை–35. |

6. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.77/DS (RC) /2008 நாள் 20.3.2008–ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.கணேசன்,

அரசு செயலாளர்.

பெறுநர்
கல்லூரிக்கல்வி இயக்குநர், சென்னை–6.
மாநிலக் கணக்காயர், சென்னை–18/35.
சம்பள கணக்கு அலுவலர்,
சென்னை–5/9/35.
கருவூல ககணக்கு இயக்குநர்,
சென்னை–35.
நகல்
உயர்கல்வித் துறை ''எப், எச்'' பிரிவுகள்,
சென்னை–9.
நிதித்துறை, ( கல்வி I), சென்னை–9.

–9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.